**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. முக்கூட்டு உறவில் இடம்பெறுபவர்கள் யாவர்?
2. படைப்பாளிக்கும் படிப்பாளிக்கும் இடையில் பாலமாகி இருக்கின்றவன் யார்?
3. 'தமிழே நீ ஒரு பூக்காடு, நானோர் தும்பி' – என்று பாடியவர் யார்?
4. 'பாலைப் புறாக்கள்' என்னும் புதினத்தின் ஆசிரியர் யார்?
5. காந்தியடிகளுக்கு மன எழுச்சி தந்த எழுத்தாளர்கள் யார்?
6. ஓவியம், ஒப்பனை முதலிய கலைகள் எந்தக் கலையைச்சார்ந்தது?
7. நெடுநல்வாடையை அகம் என்பது தவறு, அது புறமே என்று கூறிய உரையாசிரியர் யார்?
8. பாவத்தின் சம்பளம் மரணம் – எந்தச் சமயத்தின் தத்துவம் இது?
9. பகுப்பு முறை உளவியலை வகுத்துச் சொன்ன அறிஞர் யார்?
10. உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள் என்று கூறப்படுவது எது?
11. நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களைத் தொகுத்தவர் யார்?
12. 'வியாக்கியானச் சக்கரவர்த்தி' என்று அழைக்கப்படுபவர் யார்?
13. தமிழில் முதல் திறனாய்வாளர் என்று கருதப்படுகிறவர் யார்?
14. விமரிசனத்துக்காக என்று சொல்லி ஆரம்பிக்கப்பட்ட இதழ் எது?
15. திறனாய்வுக் கலை என்னும் நூலின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு ஒரு <u>பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. திறனாய்வின் அடிப்படை நோக்கம் யாது?
2. திறனாய்வாளனுடைய சமூகப் பொறுப்பு யாது?
3. இலக்கியத்தின் மொழி என்ன என்ன தளங்களிலிருந்து செயல்படுகிறது?
4. அணுகுமுறை என்பதன் பொருள் என்ன?
5. மனப்பதிவு முறை என்றால் என்ன?
6. உளவியல் அணுகுமுறை என்றால் என்ன?
7. மார்க்சியத் திறனாய்வாளர்களில் எவரேனும் ஐவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
8. இன்றைய திறனாய்வின் பணி அல்லது பண்பு எவ்வாறு இருக்கவேண்டும்?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) இலக்கியத் திறனாய்வு செய்கிறவன் அடிப்படையில் எத்தகைய பண்புகளையும் தகுதிகளையும் கொண்டிருக்கவேண்டும்?

   (அல்லது)

   (ஆ) திறனாய்வு வகைகள் குறித்து விளக்குக?

2. (அ) உளவியல் அணுகுமுறை என்றால் என்ன? விளக்கி வரைக.

   (அல்லது)

   (ஆ) உரை தோன்றுவதற்குரிய சூழல்கள், உரை வரலாறு, வகைகள், உரைகளின் முக்கியத்துவம் குறித்து எழுதுக?

3. (அ) செவ்விலக்கியங்களும் திறனாய்வும் – விளக்குக.

   (அல்லது)

   (ஆ) திறனாய்வு முன்னோடிகள் பற்றி தொகுத்தெழுதுக?

* * *